12.11.2025

அ.வ.எண்.4/2018

**பி.சா.1 - சக்திவேல், த/பெ. நஞ்சப்பன்**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 12.11.2025 is accordance with the provision of Act X of 3331

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். என் தகப்பனார் நஞ்சப்பனுக்கு இரண்டு மனைவிகள். என் தகப்பனாருக்கு சொத்து 1979 பாகசாசன ஆவணம் மூலமாக சொத்து பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி பாகசாசன பத்திரத்தில் சி-அட்டவணை சொத்து என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 1979 பாகசாசன ஆவணத்தை மூலமாக வைத்து வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அதில், இரண்டு அட்டவணைகளாக சொத்து பிரிக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. ஏ-அட்டவணை சொத்துக்கள், என் தகப்பனார் நஞ்சப்பன், சென்னியப்பன், சக்தி, கனகாத்தாள் ஆகியோர்களுக்கு கூட்டாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பி-அட்டவணை சொத்து என் தகப்பனார் நஞ்சப்பனின் மூத்த மனைவி ராமாத்தாளின் மகன் ராமசாமிக்கு ஒதுக்கப்பட்டடது என்றால் சரிதான். ஏ-அட்டவணையில் ஏக்கர் 1.60 சென்ட் மற்றும் வீடு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பி-அட்டவணை சொத்தில் 1 ஏக்கர் மட்டும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஏ-அட்டவணை சொத்து ஏக்கர் 1.60 சென்ட் கிழபுறமாகவும், பி-அட்டவணை சொத்து 1 ஏக்கர் மேல்புறமாகவும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ராமசாமிக்கு ஒதுக்கிய 1 ஏக்கரில் அவர் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான்.

3. ராமசாமி திருமணம் ஆகாமல் 16.05.1993 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ராமசாமிக்கு, ராமாத்தாள் ஒருவர் மட்டும் வாரிசு என்றால் அப்பாவும், அம்மாவும் இருந்தனர். இறந்துபோன ராமசாமிக்கு ராமாத்தாள் ஒருவர் மட்டும் வாரிசு என்றும், நஞ்சப்பன் வாரிசாக வர மாட்டார் என்றால் சரியல்ல. ராமசாமி இறந்த பின்னிட்டு, வா.சா.ஆ.2, 12.01.1995 ல் ராமாத்தாள் பொது அதிகார பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் தெரியாது. ராமாத்தாள், பொது அதிகார பத்திரத்தை நடராஜன்,

ராமசாமி, சின்னசாமிக்கு எழுதி கொடுத்த விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 1996 ல் தெரியும். 29.05.1995 ல் வா.சா.ஆ.3 ஆவணம் மூலமாக கோவிந்தராஜ், சண்முகம், சுப்பண்ண கவுண்டர் தாவா சொத்தை கிரயம் பெற்றுவிட்டார்கள் என்றால் 1996 ல் தெரியும். பின்னிட்டு என் தகப்பனார் சொத்தின் பிரச்சனை செய்ததால் என் தகப்பனார் மீது பல்லடம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.307/1996 ல் வழக்கை தாக்கல் செய்தனர் என்றால் சரிதான். என்ன விவரம் என்று தெரியாது.

4. அந்த வழக்கில் என் தகப்பனார் வழக்கறிஞர் வைத்து ஆஜராகி விட்டு பின்னிட்டு நடத்தாமல் விட்டுவிட்டார் என்றால் நடத்திகொண்டு தான் இருந்தார். வழக்கறிஞர் சொல்லாமல் விட்டுவிட்டார். அந்த வழக்கு வாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பானது என்றும், அந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் 1997 ம் ஆண்டு பல்லடம் மாவட்ட உரிமையியில் நீதிமன்றத்தில் அ.வ.எண்.176/2004 வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என் அப்பாவுக்கு வந்த மொத்த சொத்தையும் பிரிக்க வேண்டும் என வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

5. என் தகப்பனார் சென்னியப்பன், கலாமணி, சுப்பண்ண கவுண்டர், கோவிந்தராஜ், சண்முகம் ஆகியோர்கள் மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 01.07.1985 ல் ஏற்பட்ட பாகத்தை ரத்து செய்தும், புதிதாக பாகம் ஏற்பட வேண்டும் என்றும், சொத்தை 5 சம பாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகம் கோரினேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது பல்லடம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.176/2004 ல் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை என்றால் சரிதான். **பல்லடம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.176/2004 ல் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. அந்த வழக்கு நான் மேற்கொண்டு நடத்தாதல் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் எதுவும் சொல்லவில்லை. மேற்படி தள்ளுபடி செய்யப்பட்டு 6 மாதம் கழித்து எனக்கு தெரியவந்தது. அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டதை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தை ஒப்புகொண்டதால் தான், மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1

பாகப்பிரிவினையில் நான் தரப்பினர் என்றும், எனக்கு கார்டியனாக என் தகப்பனார் இருந்து எனக்குண்டான பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முன்பு தெரியாது, பின்னிட்டு தான் தெரிய வந்தது. எனக்கு தெரிந்த பின்பும், ரத்து செய்ய நடவடிக்கை எடுக்காததால் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

7. ராமசாமிக்கு சொத்தை ஒதுக்கிய பிறகு, ராமசாமியின் ஒரே வாரிசான ராமாத்தாளுக்கு சொத்து குறித்து எந்த ஏற்பாடு அவருக்கு சட்டப்படி உரிமை உள்ளது என்றால் சரிதான். எனவே ராமாத்தாள் வா.சா.ஆ.2 பொது அதிகார ஆவணம் மூலமாக அதிகாரம் வழங்க முடியும் என்றும், அது செல்லத்தக்க ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பொது அதிகார ஆவணம் மூலமாக வாதிகளுக்கு ஏற்படுத்திய கிரய பத்திரத்தை கேள்வி எழுப்ப முடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் சர்வே எண்.485/11 ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் சர்வே எண்.485/11 ற்கான சிட்டா என்றால் சரிதான். **சர்வே எண்.485/11 A1 க்கான 144 நபர்கள் பெயரில் உள்ள பட்டா எண்.2030 க்கான சிட்டா வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. மேற்படி சொத்து உட்பிரிவு ஏற்படாமல் உள்ளது என்றால் சரிதான். வாதிகள் 1995 ம் ஆண்டில் இருந்து தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருகின்றனர் என்றால் நாங்கள் தான் இருந்து வருகிறோம். என் தகப்பனார் வாதிகளின் சுவாதீனத்தை இடையூறு செய்ததால் வாதிகள் அ.வ.எண்.307/1996 வழக்கு தாக்கல் செய்து அதில் வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றும், பின்னிட்டு நாங்கள் அமைதியாக இருந்துவிட்டு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கு சொத்தில் தென்மேற்கு மூலையில் குடிசை அமைத்து விட்டு வாதியின் அனுபவத்தை இடையூறு செய்கிறோம் என்றால் சரியல்ல.

9. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளந்தார் என்றால் சரிதான். அப்போது நானும் உடன் இருந்தேன். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை நான் பார்த்துள்ளேன். அதில் நான் ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக ஆணையர் அறிக்கையில் சொல்லியுள்ளார் என்றும்,

அதற்கு நான் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் வந்து பார்த்தபோது சொத்திற்கு மின் இணைப்பு இல்லை என்றால் சரிதான். மின்சார வாரியத்தில் காலதாமதப்படுத்திவிட்டனர். நீதிமன்ற ஆணையர் வந்த பார்த்த பின்னிட்டு ஆக்கிரமிப்பு செய்த பகுதிக்கு மின் இணைப்பு பெற்றுள்ளேன் என்றால் பின்னிட்டு தான் வாங்கினேன். தாவா சொத்திற்கும் எனக்கும் சம்மந்தமில்லை என்றும், அதில் தென்மேற்கு மூலையில் குடிசை போட உரிமையில்லை என்றால் என் அப்பா இருக்கும்போது 1993, ஜூன் மாதத்தில் குடிசை போட்டோம்.

10. 1993, ஜூன் மாதத்தில் குடிசை போட்டோம் என சொல்வது பொய் என்றும், எதிர் வழக்குரையில் சொல்லாத விவரங்களை தற்போது சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் 1993, ஜூன் மாதத்தில் குடிசை போட்டிருந்தால் வாதிகள் அது சம்மந்தமாக அவர்களது 1996 ம் ஆண்டு வழக்குரையில் சொல்லியிருப்பார்கள் என்றால் வாதியின் வழக்கை நான் சரியாக படிக்கவில்லை, என் அப்பா தான் பார்த்து கொண்டிருந்தார். 2018 ல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக தான் குடிசை போட்டோம் என்றும், தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.எனவே தாவா சொத்தில் உள்ள குடிசையை அகற்றி தர கடைமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பு செய்துள்ள பகுதியில் மின் இணைப்பு பெற்றுள்ளது, சட்டவிரோதமானது என்றும், அந்த மின் இணைப்பை திரும்ப ஒப்படைக்க கடைமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

11. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டவாறு ஆக்கிரமிப்பை அகற்ற நான் கடைமைப்பட்டுள்ளேன் என்றும், வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur